Acc No. 37212

உ

கடவுள் துணை.

# பஞ்சாக்ஷரப் பதிகம்
# நடராஜப்பத்து
# சிதம்பர இரகசியம்

இம்மூன்றுபாகம் அடங்கியது.



சூளை - மாணிக்க நாயகரவர்களால்
சென்னை சூளை
ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்திற்
டைடில் பேஜ் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட்.] 1925. [விலை அணு 1.

இப்புத்தகம் தேவையானால் S. T. மாணிக்க நாயகர் இராமலிங்கம் & கம்பெனி, சூளை ஐரோட், மதராஸ்.

# அசல் ஜப்பான் பட்டு குட்டைகள்

## 5½-முழ நீளம் 2½-முழ அகலமுள்ள



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுகுட்டை வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். செலவழிந்து விட்டபின் 10-ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டை கிடைப்பது அரிது.

மிகவும் நேர்த்தியான பளபளப்போடும் கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக் கொள்ளவும், துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் மேலாக்காகவும், சிறு பெண்கள் தாவணியாகவும் உபயோகிக்கலாம்.

இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணமுதலிய பலரகங்கள் உண்டு.

குறைந்த விலை குட்டை 1-க்கு ரூபா 2 12 0

---

## "இராஜேஸ்வரி"

## கூந்தல் வளரும் தைலம்

அநேக நற்சாட்சிபத்திரங்கள் பெற்றது.



இத்தைலம் சிறந்த வன மூலிகைகளினால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது. சிறந்த வாசனையும், கூந்தலை நீளமாக வளரச்செய்யும் அபார சக்தியும் இதற்குண்டு. சகலவித சிரரோகங்களையும், கண்களில் நீர்வடிதல், மயக்கம், கண்ணெரிச்சல் முதலிய வியாதிகளையும் அடியோடு நீக்குவதன்றி சரீரத்திற்கு ஆரோக்கியத்தையுங் கொடுக்கும்.

டின் 1-க்கு விலை அணா 12.

## மயிர் போக்கும் சோப்

உரோமத்தை நீக்கும் ஓர் சிறந்த வஸ்து. இதற்கு கத்தி வேண்டுவதில்லை எந்த இடத்தில் ரோமத்தை நீக்கவேண்டுமோ அந்த இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி அதன்மேல் சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் பொறுத்து கார்டினாலாவது ஓலைத் துண்டினாலாவது வழித்துவிட்டால் உரோமம் யாவும் நீங்கி மழமழப்பாகும். இதில் வேக்காடு எரிச்சல் முதலியவைகளில்லை.

சோப் 1-க்கு விலை அணா 0 6 0

3-சோப் சேர்ந்த பெட்டி ரூ 1 0 0

## நரைமயிர் கருக்குந் தைலம்.

இத்தைலம் இதற்கென்று அநேகரால் விற்கப்பட்டு வரும் பலவித கப்புகளைப் போன்றதல்ல.




மயிரைச் செம்பட்டையாகவும், சாம்பல் நிறமாகவும் மாற்றி விகாரப் படுத்தும் குணம் இத்தைலத்தில் கிடையாது. நரைத்த மயிருக்கு இத்தைலத்தைப் பூசிய 5-நிமிஷங்களுக்கெல்லாம் கருமைநிறத்தையும் பளபளப்பையும் உண்டாக்கும். வயோதிகரை வாலிபரைப் போல் தோற்றுவிக்கும். உபயோகிக்கும் விதம் பார்சலுடன் அனுப்பப்படும், பாக் 1-க்கு ரூபா 1.

சர்வ தேள்

## விஷ நிவாரணசஞ்சீவி

குணமிராவிடில் ரூ 50 பரிசளிக்கப்படும்.



ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டியமுதன்மையான ஔஷதம். தேள் நட்டுவாக்களி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷக்கடி 2-நிமிஷத்தில் பறக்கும். இது அநுபோகமுள்ள கைகண்ட மருந்து, உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். இரண்டுவித மருந்து பாக் 1-க்கு அணா 8.

ஓம்:

# சிதம்பர இரகஸ்யம்.

இப்பெரும் பூமண்டலத்துள்ளே எல்லா விதத்தாலும் மிகச் சிறப்புற்றோங்கி விளங்கும் நம் பரதகண்டத்தில் அநேக சிவாலயங்களும், விஷ்ணு வாலயங்களும், வேறு பல தேவாலயங்களும் இருக்கின்றன அவைகள் அனைத்திலும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தூபி, விமானம், பிராகாரம், கோபுரம் என்னுமிவைகள், ஒரு தன்மையாகவே காணப்படுகின்றன. இவையின்றி ஒவ்வொரு ஆலயத்திலும் அவ்வாலயத்தின் பிரதான தேவதாபிம்பம் கர்ப்பக் கிரகத்திலேயே இருக்கின்றது. இங்ஙனம் ஒன்றுபோல் எல்லா ஆலயங்களும் கட்டப்படுவதற்குச் சில முக்கிய காரணங்கள் உள. அவைகளை இங்கே சிறு பான்மை விளக்கிக் காட்டுவாம் :—

உலகத்திலேயுள்ள மாந்தரனைவரும் உண்மேனுக்காக அகப்பொருள்களை அறிந்துய்யும் ஆற்றல் பெற்றவராதலால் யாவர்களும் தந்தம் சரீரவியல்பு எளிதிலே புலப்படும் பொருட்டு ஆலயங்கள், செங்கல், கருங்கற்களால் வெளிநோக்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்கள் இருதயகமலப் பிரஸ்தாரம் (இருதயகமலத்தை விரித்துக்குறிப்பது) எனவும் சரீரபிரஸ்தாரம் (சரீரத்தை விரித்துக்குறிப்பது) எனவும் இருவகைப்படுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இவற்றுள் இருதயகமலப் பிரஸ்தாரத்தாற் சிதம்பர முதலிய சில தலங்களும் சரீரப் பிரஸ்தாரத்தாற் வேறு பல தலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதருள்ளத்தே சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு வஸ்துக்களும் இருதயகமலப் பிரஸ்தார வாலயங்களும, யோகிகளறிய வேண்டிய எழுவகைத் தாதுக்களின் நிலைமை சரீரப் பிரஸ்தார வாலயங்களாலும் உருவமாகக் காட்டப்படும். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்து ஒவ்வொரு எழுத்தின் பொருளென ஆகமங்களின் ஓரே வழி குறிக்கப்பட்ட அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்னும் பஞ்சகோச சிவாலயங்களிலே ஐந்து பிராகாரங்களாகவும் பிரணவமொழிந்த ஸ்ரீ அஷ்டாக்ஷரப் பொருளெனப் பாஞ்சராத்திரத்தின் ஓரிடத்துக் கூறப்படும். சரீரத்திலடங்கிய ரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்னும் சப்த தாதுக்கள், விஷ்ணு வாலயங்களிலே எழு பிராகாரங்களாகவும்

இருக்கின்றன. பிரணவக்கூட்டிற் சிவமந்திரம் ஆறெழுத்தும், நாராயணமந்திரம் எட்டெழுத்துமாகும். சில விடங்களிலே ஆலயங் கட்டுவதற்கு இடம் பொருள் குறைவுபடின் அங்கு தூல சூக்கும காரண சரீரங்களைக் குறிக்கும் மூன்று பிராகாரங்களேனும் அணைத்திருக்கும் பொதுவாக ஒரே பிராகாரமேனும் அமைப்பதுண்டு. ஒவ்வொரு சரீரத்திலும் யோகிகளறிய வேண்டிய மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆஞ்ஞையெனும் ஆறுதாரங்கள் இங்கு முறையே கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபமெனக் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கர்ப்பக் கிரகத்திலும் கமலமுகை போன்ற விமானம் ஒன்றிருக்கும். அதனுட் புறத்திற்ருன் கடவுளுடைய திருவுருவம் அமைக்கப்படும். இனி இருதயகமலப் பிரஸ்தாரவாலயங்களிலே இருதயத்திலுள்ள விஷயங்கள் விரித்துக் குறிக்கப்படுமென்று முன்னே கூறியதற்கு சிதம்பராலயத்தை திருஷ்டாந்தமாக எடுத்து நிரூபிப்பாம்.

"இச்சிதம்பர க்ஷேத்திர மகிமை புராணங்களிலே மாத்திரம் புகழப்படுவதன்று. வேதத்தும் தரிசிஞேப நிடத்திலேயும், சிதம்பரம் இருதயமத்தியுள்ளது" என்று ஓதப்பட்டிருக்கின்றது இதனுல் இது விராட்புருடனுடைய இருதயஸ்தான மென்பது துணிபெண்பாம். அதுபற்றியே புராணங்கள் "இவ்வாலயங்கள் கட்டும்பொழுது யோக முதல்வராகிய ஸ்ரீ பதஞ்சலி முனிவர் சிதம்பர ரகஸ்ய மறிந்து அதனை விசுவகர்மாவுக்கு அநுக்கிரகிக்க, அவன் அவராணையை சிரமேற் கொண்டு ஆலயஞ்சமைத்தனன்" என்று கூறுகின்றன. ஓர் மகாயோகியின் சரீரத்தை வடக்கே தலையும் தெற்கே பாதமுமாகவைத்து நோக்கின், அதுவும் இவ்வாலய அமைப்பும் ஒத்திருக்கும் இவ்வாலயத்தேயுள்ள ஆயிரக்கால் மண்டபம் தலையின் புறத்திருக்கும் ஆயிர மிதழுள்ள கமல மெனப்படும். சிவகங்கை மூளையின் மேற்புரத்துள்ள சந்திரபுஷ்பகரணி யெனப்படும் அமுதவாபிகையையும் உவமையாய்ப் பெற்றிருக்கின்றன. ஜாக்கிரதாவஸ்தையிலே ஆன்மாவினுடைய அறிவு மூளையிலே விளங்குவது இயல்பாதலால் தேவ விமானத்தில் விடியற் காலமும், பிரதோஷ காலமுமாகிய மார்கழி ஆனி மாசங்களில் ஆயிரக்கால் மண்டபத்திலே ஆனந்த நடராஜ மூர்த்திக்கு மகா அபிஷேகம் நடந்து வருகின்றது. இவற்றின் தென்புறத்திலே ஸ்ரீ குருமூர்த்தியும்

ஜோதிலிங்கமும் எழுந்தருளியிருக்கு மிடம் விசுத்திஸ்தானமாகப் பாவிக்கப்படும். அதற்குத் தெற்கே "திருச்சிற்றம்பல" மென்னும் மகாசபை யிருக்கின்றது. அங்கே, பிரம, விஷ்ணு ருத்திர மகேஸ்வர, சதா சிவர்களுக்கென ஐந்து பீடங்களிருக்கின்றன. திருவைந்தெழுத்துகளைந்தும் ஐந்து படிகளா யிருக்கின்றன. அவ்விடத்துள்ள கதவு அவித்தை யெனப்படும் தத்துவ தாது விகங்களாகிய தொண்ணூற்றாறு பதார்த்தங்களும் தொண்ணூற்றாறு பலகணிகளாயிருக்கின்றன. நடுவிலிருக்கும் நான்கு வேதங்களாலும் சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம்பளங்கள் இருபத்தெட்டு ஆகமங்களுமாம். இவைகளுள் அடங்கிய இடத்தைச் சுத்தவித்தை யெனவும் ரகசியமுதல் நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம் வரையில் உள்ள பீடம் பிரணவபீட மெனவும்படும். அப்பிரணவ பீடத்தின் கண்ணே சகல திருமேனியுடைய, ஸ்ரீ மதானந்த நடராஜ மூர்த்தி எழுந்தருளியிருக்கின்றனர். அதன்பின் வாயு பாகத்தில் சுக்ல நிஷ்களமாகிய வியந்தா வியக்த திங்கமும், அதன் பின்னே ஆரண ஆகமங்களும் அறிந்தோதவறியதும் குணவரம் புகடந்ததும், திருச்சிற்றம்பலம் என உயர்ந்தோராற் புகழ்ந்தேற்றப் படுவதுமாகி அழியாப்பரசுடர்ச் சிவவொளிச் சிதாகாசவடிவம் விளங்கா நிற்கும் இச்சிதாகாசவடி வினையே ஊனக் கண்ணாற் கண்டோர் இரகசிய மென்பர். கர்ப்பக்கிரகமாம் இவ்விடத்தே அகிலலோக மாதாவாகிய ஸ்ரீ சிவகாமசுந்தரி என்னும் பராசத்தியாரோடு தூல நடராஜ மூர்த்தியும், இரத்தின மயமான சூக்கும நடராஜ மூர்த்தியும் சூக்கு மதரமான மற்றோர் இலிங்கமும் உள்ளன. ரகசியத்தை நிஷ்கள மென்றும் வியக்தாவ்பக்த லிங்கத்தைச் சகள நிஷ்கள மென்றும், ஸ்ரீ மதானந்த நடராஜ மூர்த்தியைச் சகள வடிவமென்றும், உரைக்கப்படும். இன்னும் கீழ் புறத்திலே சண்டேஸ்வர ஸ்தானத்திலே பிரம தேவரும், தென்புறத்திலே விஷ்ணு மூர்த்தியும், வடபுறத்திலே வைரவ மூர்த்தி யென்னும் சங்கார ருத்திரரும் இருக்கின்றார்கள். விமானத்தின் மேலுள்ள ஒன்பது கும்பங்களும் வாமை முதலிய சத்திகளாம் அவ்விமானத்திலுள்ள கை மரங்கள் அறுபத்து நான்கு கலைகளையும் செப்போடுகள் இருபத்தோராயிரத்தி அறுநூறும் மனிதனால் ஒவ்வொரு தினமும் விடப்படுகின்ற சுவாசங்களையும் ஆணிகள் எழுபத்திராயிரம் நாடிகளையும் குறிக்கின்றன. மற்றும் அனேக ரகசியங்கள் முன் விளக்கியவற்றுள் அமைந்தன.

இச்சபையின் தென் புறத்தேயுள்ள கனகசபை முற் கூறிய சபையின் அநேக பாகங்களைப் பெற்றதும், பதினெண் புராணங்களைப் பதினெண் கம்பங்களாகப் பெற்றதுமாய், மணி பூரகஸ்தானமாய் விளங்குகின்றது இங்குள்ள சபைகளைந்தும் ஐவகைக் கோசங்களை உணர்ந்திருக்கின்றன.

அவையாவன :—இராஜ சபை (ஆயிரக்கால் மண்டபம்) அன்னமய கோசமும், தேவ சபை (பேரம்பலம்) பிராணமய கோசமும், நிர்த்தசபை மனோமய கோசமும், கனகசபை விஞ்ஞானமய கோசமும், சிற்சபை ஆனந்தமய கோசமுமாம். அன்றியும் திரிபுரா தந்திரத்திற் சொல்லிய மூன்று கூடங்களும் மூலகூடம், தேவ கூடம், ரகசியகூடம் என இங்கு குறிக்கப்பட்டன. மனிதனுடைய இருதயம் சரீரத்தின் நடுவிலிராமல் சிறிது இடது புறத்தே விலகியிருத்தலால் இங்கு ஆலயத்தின் சரி நடுவுக்குச் சிறிது இடபுறத்தே கர்ப்பக்கிரகம் அமைந்திருக்கின்றது இருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரிலின்றி பக்கங்களிலிருப்பதால் இங்கு வழிகள் கர்ப்பக்கிரகத்தில் பக்கங்களி லமைந்திருக்கின்றன. இச்சிற் சபையின் தென்புறத்தே மகா விஷ்ணு ஸ்தானமும் அதற்குத் தெற்கே சங்கார நிருத்த மூர்த்தி ஸ்தானமும் அதற்குத் தெற்கே கணபதி ஸ்தானமும் தரும வடிவாகிய இடபதேவதானமும் கோபுரம் இருக்கின்றன. ஐந்து ஆவரணமதில்களும் ஒரேவித அளவில் அமைந்தன. சரீரத்தினும் பிராணன் பன்னிரண்டங்குலம் அதிக மென்னும் யோக நூல் பிரமாணங் கொண்டே இரண்டாவது மதிவிற் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய மகா மேன்மை பொருந்தி யனந்த சிதாமூர்த்தியை இவ்வாலயத்திலேயே சாஸ்திர விதிப்படி மெய்யன்போடும் சுவாமி தெரிசனஞ் செய்யின் ஞான முதிக்கும் பந்த நீங்கும் பூரணத்துவ முண்டாம் ஆனந்தம் விளையும் ஆன்மநிலை விளங்கும் அத்வைத முத்தி சித்திக்கும்.

சிதம்பர இரகஸ்யம் முற்றிற்று.

உ

## சிதம்பரம் நடராஜர்

# பஞ்சாட்சரப் பதிகம்.

வசியசிவ சங்கரா வசியகெங் காதரா வசியகை லாசவாசா, வசிய பணியணியுரா வசியமான் மழுகரா வசியசிவ காமிநேசா, வசியதிரு நேத்திரா வசியபுவ னேஸ்வரா வசியஓம் நடனபாதா வசிமகா புரியழக வசிய புலி யிடையழக வசியசிர மாலையழகா, வசியமதி முடியழக வசியபசு பதி யழக வசியமென மனதில்பாசா, வசியமுன் னூலழக வசியவெண் ணீரழக வசியமறை பாவுமழகா, வசியவென உனையனு தினம்போற்று மடியார்க்கு அருள்மடை திறந்ததில்லைக், கதிபதி ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பி லுறை நடனபதியே. 1

சிவயநம வென்றுதின மூழ்கியுரு வேற்றுவார் செய்தொழிலெலாம் வசியமாம், ஜெகவசியமாம் சகல முகவசியமாம்செய்ய சித்துகளெல்லாம் வசியமாம் வயநமசி யென்றவுரு மாட்டுவார், சத்ராதிவானுட விட்டபங் தாம் வடங்காத பூதபேதம், பசாசிவை யெல்லாம்வளர் குலாலன் திகிரி யாம், யநமசிவவய நமசிசிவயனமயெல்லா முன்னடலமன்றோ, யிவ்வுலக பொருளுதவி அவ்வுலகமருளுதவி யீபவிருதெய்வமுளவோ, அவுணதிபுவ னதி சௌனதிமுந்தர்க்கு அருள்மடை திறந்ததில்லை, அதிபதிஜெனகாதி துதிபதிசிவகாமி அன்பிலுறை நடனபதியே. 2

புல்லாய்ப்பிரந்தாலு மிருகாதி ஜெனனங்கள் பசியாரி மகிழுமன்றோ, பூண்டாய்ப்பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டுசில பிணிதீர்த்து புகழ்வ ரன்றோ, கல்லாய்ப்பிறந்தாலும் நல்லவர்கள் மிதிகொண்டு காட்சிக்குரு த்துமன்றோ, கழுதையுருவந்தாலும் ஆவெனக்கத்தினால் கைக்கண்டசகுன மென்பார், யெலலாமிலாமலே இப்பிரவி தந்தென்னை யேங்கவிட்டகல நின்றாய், யெத்தனை அன்னையின் யெத்தனை தந்தையின் யெத்தனை பிறவி வருமோ, அல்லலெனும் மாசருத்தாட்கொளுந் தெய்வமே அப்பனே தில்லைநகர்வாழ்; அதிபதி ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடன பதியே. 3

கல்லாதமூடரைக் கயவரைக் காமுகரை கல்நெஞ்சலஞ்சியவரை கற்றுமறிவில்லா மோழையைக் கோழையைக் கார்க்கவைத் துண்டபேரை, பொய்க்கு அஞ்சாத பொல்லாதமூர்க்கரை மிருகங்கள் போன்றவறை பிணமொத்தபேரை பேரை, பூமிபிற்பிறருக்கு யிடுக்கமுயல்வோர்களை ஞானவதென்று பலரை, நல்லாரெனக்கவிகள் சொல்லியலையாமல்நா னுயுரைத்ததேது, அல்லிலும் சிவமே, நானன்றிநீயேது நீயன்றிநானேது பகலிலும் நீயிலாதசைவேது அருள்மடை திறந்ததில்லைக் கதிபதி ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. 4

ஜெகமெட்டு திசைகளுங் கிரிகள்பல தெய்வமும் செம்பொன்மணி மாடமேடை, சேயன்னை தந்தையும் நானென்ற ஆணவஞ் செல்வமும்வல்ல சித்தும், முகடேறுமெமனுக்கு முன்வந்துசவுமோ முத்திக்குவித்து மூள தோ, மூவாசைவிட்டுகெனி சறுகாதி தின்றாலும்முன்செய்த வினையகலுமோ, யீசநீ யிகமுனிய சுகபோகம் நின்னருளலாதேது யில்லையவ்வுலகமென்றால், அகவுறவுபற்றற்று காணுது யிருளேதுவெளியேது நினைவேதுகனவுமேது, அதிபதி ஜனகாதி துதிபதி சிவ துறவுமூற்றுற்ற ஆரியர்கள்பாவுதில்லை, காமி அன்பிலுறை நடனபதியே. 5

பஞ்சாட்சரப்பதிகம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# நடராஜப்பத்து.

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின் அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டல மிரண்டேழும்நீ பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க்குயிரும்நீ பிறவும்நீயொருவநீயே, பேதாபேதம்நீ பாதாதிகேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்கவந்தகுரு புகழொணாகிரகங்களொன்பதும் நீயிந்த புவனங்கள் பெற்றவனும்நீ, எண்ணரிய ஜீவகோடிகளீன்றவப்பனே என்குறைக ளார்க்குரைப்பேன் யீசனே சிவகாமிநேசனேயெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 1

மானாடமழுவாட மதியாட புனலாட மங்கைசிவ காமியாட, மாலாட நூலாட மறையாட திரையாட மறைதந்த பிரம்மனாட, கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட, குஞ்சர முகத்தனாட, குண்டல மிரண்டாட தண்டைபுலியுடையாட குழந்தை முருகேசனாட, ஞானசமபந்தரொடுயிந்திரர் பதினெட்டு முனியட்ட பாலகருமாட, நரைதும்பை யறுகாட நந்திவாகனமாட நாட்டியப்பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடி யிதுவேளை விருதோடி ஆடிவருவாய் யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்டு கனவென்ற வாழ்வைநம்பி, காற்றென்ற மூவாசை மாருதச்சுழலிலே கட்டுண்டு நித்தநித்தம் உடலென்ற கும்பிக்கி உணவென்ற யிரைதேடி ஓயாமலிரவுபகலும், உண்டுண்டுறங்குவதை கண்டதேயல்லாது ஒருபயனடைந்திலேனை, தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும் தாபரம் பின்னலிட்டு, தாயென்று சேயென்று நீயென்று நானென்று தமியேனையிவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று யேனென்று கேளாதிருப்பதுன்னழகாகுமோ, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணந் தம்பனம்வசியமல்ல, பாதாளவஞ்சனம் பரகாச பிரவேச மதுவல்ல சாலமல்ல, அம்புக்குண்டுகள் விலகமொழியு மந்திரமல்ல ஆகாயகுளிகையல்ல, அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல அறியமோகனமுமல்ல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி கொங்கணர் புலிப்பாணியும் கோரக்கர் வள்ளுவர் போகமுனிவரெலாங் கூறிடும் வயித்தியமல்ல, எம்மனதுன்னடிவிட்டு நீங்காது நிலைநிற்க யேதளவு புகழவருவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்லியுஞ்செவியென்னமந்தமுண்டோ, நற்பநெறி யறியாத பிள்ளையைப்பெற்றபின் நோக்காததந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின் தளராத நெஞ்சமுண்டோ, தந்திமுக னறுமுகன் யிருபிள்ளை யில்லையோ தந்தைநீ மலடுதானோ, விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே வினையொன்று மறிகிலேனே, வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே வேடிக்கை யிதுவல்லவோ, யிந்தவுலகீரேழு மேனளித்தாய் சொல்லுமினியுன்னைவிடுவதில்லை, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 5

வழிகண்டு உன்னடியை துதியாதபோதிலும் வாஞ்சையில்லாத போதும், வாலாயமாய்க்கோயில் சுற்றாதபோதிலும் வஞ்சமே செய்தபோதும், மொழியெகனைமொகனையில்லாமலேபாடினும் மூர்க்கனேன் முகடாகிலும்,

மோசமேசெய்யினும் தேகமேகவரினும் முழுகாமியேயாகினும், பழியெனக்
கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர்கள் சொல்லார்களோ, பார
றியமனை விக்கி பாதியுடலீந்தநீ பாலனைக்காக்கொணாதோ, யெழில்பெரிய
அண்டங்களடுக்கா யமைத்தநீ யென்குறைகள் தீர்த்தல்பெரிதோ, யீசனே
சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னைதந்தைகளென்னை யீன்றதற்கழுவனோ அறிவிலாதற்கழுவனோ,
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ ஆசைமூன்றுக்கழுவனோ,
முன்பிறப் பென்னவினை வந்து மூளுமென்றழுவனோ முத்திவருமென்று
ணர்வனோ, தன்னைநொந் தழுவனோ உன்னைநொந் தழுவனோ தவமென்ன
வென்றழுவனோ, தையலர்க்கழுவனோ மெய்வளர்க்கழுவனோ தரித்திர
திசைக்கழுவனோ, இன்னமென்னப்பிறவி வருமோவென்றழுவனோ எல்லா
முறைக்கவருவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ்
நடராஜனே. 7

காயாமுன்மரமீது பூபிஞ்சறுத்தனோ கன்னியர்கன்பழிகொண்டனோ,
கடனென்று பொருள்பறித்தே வயறெறித்தனோ கிளைவழியில் முள்ளிட்ட
னோ. தாயாருடன்பிறவிக் கென்னவினைசெய்தனோ தந்தைபொருளில்லையெ
ன்றனோ, தானென்றுகெர்வித்து கொலைகளவு செய்தனோ தபசிகளையேசி
னேனோ, வாயாரபொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ வானரைப்
பழித்திட்டனோ, வடவுபோலேபிறரைசேர்க்காதடித்தனோ வந்தபின்யென்
செய்தனோ, ஈயாதலோபியென் றேபெயரெடுத்தனோ யெல்லாம் பொறுத்
தருளுவாய், ஈசனேசிவகாமிநேசனேயெனையீன்றதில்லைவாழ்நடராஜனே

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்னதன்பிறவியுறவுகோடி, தன
மலைகுவித்தென்ன கனபெயரெடுத்தென்ன தாரணியை யாண்டுமென்ன,
சேயர்களிருந்தென்ன குருவாய் இருந்தென்ன சிஷர்களிருந்து மென்ன,
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்னநதிகளெல்லாம்,
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை ஒன்றைகண்டுத்தடுக்க, உதவு
மோ யிதுவெலாம் சந்தைவுற வென்றுதான் உன்னிருபாதம் பிடித்தேன்,
யார்மீதவுன்மன மிருந்தாலுடன்கடைக் கண்பார்வையது போதுமே, ஈச
னே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமுஞ்சொல்லவோ உன்மனங்கல்லோ இரும்போ பெரும்பாறை
யோ, இருசெவியுமந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக் கழகுதானோ,
யென்னன்னை மோகமோ யிதுயென்ன சோபமோ யிதுவேவுன் செய்கை
தானோ, உன்னைவிட்டெங்கு சென்றாலும் விழலாவநான் உனையடுத்தாங்
கெடுவனோ, துகோ விதின்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை யுற்றுபார்
பெற்றவையா என்குற்றமாயினும் உன்குற்றமாயினும் பினியருளளிக்கநினை
வாய், ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

சனி ராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய் குருச்சந்திரன் சூர்ய
னிவரை, சற்றெனக்குள்ளாக்கிராசிபணிரெண்டையும் சமமாய்நிறுத்தியுட
னே, பனியொத்த நக்ஷத்திரங்களிருபத்தேழும் பக்குவப்படுத்திபின்னால்,
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டிபாரையும் அதட்டியென்
முன், கனிபோலவேபேசி கெடுநினை நினைக்கின்ற கசடர்களையுங் கசக்கி,
கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத்தொண்டரின் தொண்டர்கள்
தொழும்பனுக்கி. இனியவளமருவு சிறுமணவை முனிசாமி யெனையாள்வ
தினியுன் கடன்காண் ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை
வாழ் நடராஜனே. 11

நடராஜப்பத்து முற்றிற்று.

## சூளை - மாணிக்க நாயகரவர்களால் பதிப்பித்த

# நூதன புத்தக விளம்பரம்,

வீரவசந்தாரயர் உற்பவமென்னும்
காலக்யானப் பாட்டு முதற்பாகம்
மேற்படி இரண்டாம் பாகம்
ஸி. சன்னேய்யா நடத்திவரும்
தசாவதாரப் பாட்டு
பாதுகை பட்டாபிஷேகப் பாட்டு
பஞ்சாமிர்தப் பாட்டு
மேற்படி இரண்டாம் பாகம்
பாலாபிஷேகப் பாட்டு
போரூர் முருகன் பாட்டு
அருள்கடை ஆண்டிபண்டாரபாட்டு
மேற்படி தெலுகு
வேலுபண்டாரம் பாட்டு
திருமயிலை கபாலீஸர் தியானம்
கஞ்சிவரதன் பாட்டு
கதர் ஆனந்த எலப்பாட்டு
மஹாத்மா காந்திப்பாட்டு முதல்
மேற்படி இரண்டாம் பாகம்
வள்ளி தெய்வானை வசல்
ஜீவாத்தினம்
கந்தன் கனகாபிஷேகப்பாட்டு
காந்தி உண்ணாவிரதம்
மேற்படி தெலுகு
அண்டா சீட்டுப்பாட்டு
அரிபஜனை சிவபஜனைப் பாட்டு
ஜெயார்தாஸ் சஞ்சலப்பாட்டு
புதிய பஜனை பாட்டுகள்
மேற்படி இரண்டாம் பாகம்
பண்டரி பஜனை பாட்டு
எரோப்ளேன் திருடன் பாட்டு
சென்னை விநோத சிங்காரப் பாட்டு
மேற்படி தெலுகு
கோபாலுநாயகர் கொலை
பார்வதியம்மாள் கொலை
காளியப்பன் துயரம்
கனகம்மாள் துயரம்
மீனாக்ஷியம்மாள் கொலை
விசாலாக்ஷி துயரம்
காலேதாவிகட்டி மாலேபிள்ளை
ஜானகிகொலை 2-பாகம்

இது எல்லா புத்தகக்கடைகளிலும் கிடைக்கும்.

## ஹரிஹரன் காந்தி பக்திரச பஜனானந்த கீதமென்னும்

# பாசுர சேகரத்திரட்டு.

இப் புத்தகம் நூதன இசைப்பாவில் பல இந்துஸ்தான் தியாகய்யர் க்ருத்தி தற்கால நாகரீக வர்ணமெட்டுகளில் சொன்னயமும்பொருள்னயமும் வமைத்து மதுரம்பழுத்து தேன்றுளிக்கும் சந்தச்சுவையுடன் விநாயகர் விஷ்ணு, பரமசிவம், உமையவள், வேலவன், முருகன், கந்தன், ஷண்முகம், பழனியாண்டி என்று இன்னும் பலவிதமாய் புகழும் தேவர்கள் பேரிலும், கலியினில் கடவுளாய் விளங்காநின்ற மஹாத்மா காந்தியடிகள் இந்து முஸ்லீம் தேசாபிமானிகள் பேரிலும் இனிய செந்தமிழில் ராகதாள வர்ணமெட்டுகளுடன் மிகவும் இன்றியமையாத நல்லொழுக்கத்தை போதித்து ஞானமென்னும் முத்தியை அடைவதற்கு இந்நூல் முதன்மை வாய்ந்தது என்பதை இதை கண்ணுறும் யாவருமறிவர். இது 16-பாரம்.

64-பேஜ் 128-பக்கமுள்ள டிம்மி 8-பேஜ் ஸ்சயி ஸ்டிப்பயிண்டு புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

இப்புத்தகமும் இன்னுமதி நூதன சில்லரை புத்தகங்களும் விலை சாசமாக வியாபாரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

---

எமது விலாசம்:—எஸ். டி. மாணிக்க நாயகர்.
இராமலிங்கம் கம்பெனி, சூளை ஐரோட், மதராஸ்.

பெரியநாயகியம்[illegible] சூளை, மதராஸ்.